258, எம் வின்செண்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# சன்லைட் இப்புத்தாண்டு மிகச் சிறப்பான ஆண்டாக அமைய 'Best Ever Sunlight' தயாரிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது!

**கொழும்பு, 19 ஜனவரி 2022:** புத்தாண்டு பிறந்துள்ள நிலையில், இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற வர்த்தகநாமமான சன்லைட், "மிகச் சிறந்த" ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், 'Best Ever Sunlight' என்ற தயாரிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. அனைவருக்கும் மிகவும் பரிச்சயமான மற்றும் நேசிக்கப்படுகின்ற வாசனைகளான ரோசா, சக்குரா, மல்லிகை மற்றும் எலுமிச்சை ஆகிய நான்கு வடிவங்களில் தனது 'Best Ever' சலவைத் தூள் தயாரிப்பு வரிசையை இவ்வர்த்தகநாமம் வழங்குகின்றது. இவற்றின் டபுள் பெர்ஃப்யூம் லாக் (Double Perfume Lock) மூலம், தயாரிப்புகள் நீண்ட நேரத்திற்கு நிலைத்திருக்கும் நறுமணத்தை ஆடைகளுக்கு அளிக்கின்றன. சலவைத் தூளை வாங்கும் போது நுகர்வோர் கவனிக்கும் முக்கியமான அம்சமாக இது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சன்லைட் அணி, யூனிலீவர் நிறுவனத்துடன் இணைந்து, எமது தேசத்திற்கும், மக்களுக்கும் 'மிகச் சிறந்த ஆண்டாக' இருக்க ஆசீர்வாதங்களை வேண்டி இப்புத்தாண்டை வரவேற்கும் வகையில் பல்வேறு இடங்களில் மத அனுட்டானங்கள் நடத்தப்பட்டன. புத்தாண்டு தினத்தன்று அனைத்து மத தலங்களிலும் வழிபாடுகள் மற்றும் ஜனவரி 3 ஆம் திகதி மீண்டும் நாட்டின் முக்கிய இடங்களில் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகியவற்றை உள்ளடக்கியவாறு சமய ரீதியான ஆசீர்வாத நிகழ்வுகள் இடம்பெற்றன. தேவத்த தேவாலயம் - ராகம, ஸ்ரீ தலதா மாளிகை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா மகா விஷ்ணு கோவில் மற்றும் ஷேக் உஸ்மான் மசூதி ஆகிய பிரசித்தி பெற்ற சமய தலங்களில் சமய அனுட்டானங்கள் நடைபெற்றன. சமூகங்கள் மத்தியில் அக்கறையுடன் பிணைப்புக்களை மேலும் வலுப்படுத்தும் சன்லைட்டின் அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை மேம்படுத்தும் வகையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வீட்டுப் பராமரிப்பு, நீர், உணவுகள் மற்றும் பான வகை உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் பணிப்பாளரான ஷர்மிளா பண்டார** அவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில், *"புத்தாண்டு மலர்ந்துள்ள நிலையில், நாட்டில் அனைத்து வீடுகளிலும் ஆடைகளைக் கழுவும் அனுபவத்தை மேம்படுத்த உதவுகின்ற எமது புதிய 'Best Ever Sunlight' சலவைத் தூள் தயாரிப்பு வரிசையை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். எப்போதும் ஆடைகளுக்கு அப்பாற்பட்ட அக்கறைக்கு புகழ்பெற்ற ஒரு வர்த்தகநாமம் என்று பெயர்பெற்றுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டை மிகச் சிறந்த ஆண்டாக மாற்றுவதற்கு அனைத்து சமயங்களும் வாழ்கின்ற எமது தேசத்திற்கும், அதன் மக்களுக்கும் ஆசிர்வாதங்களை வேண்டி, ஒரே தேசமாக ஒன்றுபட்டு, எமது சமூகங்கள் மத்தியில் 'அக்கறையுடன் பிணைப்புக்களை வலுப்படுத்தும்' சன்லைட்டின் நோக்கத்தை எம்மால் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளமை எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது,"* என்று குறிப்பிட்டார்.

135 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட சன்லைட், உள்நாட்டின் விழுமியங்கள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைப் புரிந்து கொண்டு, நாடு முழுவதும் உள்ள இலங்கையர்களின் உள்ளங்களையும், எண்ணங்களையும் வென்று அனைத்து வீடுகளிலும் உச்சரிக்கப்படுகின்ற ஒரு நாமமாக அபிமானம் பெற்றுள்ளது. இது இலங்கையின் சலவைத் தயாரிப்புக்களைப் பொறுத்தவரையில் இத்துறையில் தற்போது சந்தையில் முன்னணியில் உள்ளது. இனம் மற்றும் மத வேறுபாடுகளின்றி, துணிகள் அல்லது மனித இதயங்களில் அக்கறையுடன் பிணைப்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சன்லைட் தெளிவாக இனங்கண்டு, அதற்கமைவாக செயற்பட்டு வருகின்றது. இவ்வாறாக, பல வருடங்களாக,

இந்தச் செய்தியை நாடு முழுவதும் எடுத்துச் சென்ற வர்த்தகநாமம், சமூகத்தின் அனைத்துப் பன்முகத்தன்மையையும் வரவேற்கவும், நாட்டில் உள்ள அனைத்து இலங்கையர்களையும் ஒன்றிணைக்கவும் விரும்புகிறது.